www.freetnbooks.com

| 11 - STD | அரையாண்டுத் தேர்வு - 2025 | |
|---|---|---|
| நேரம்: 3:00 மணி | பொருளியல் | மதிப்பெண்கள்: 90 |

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 20 x 1 = 20**

1. நுண்ணியல் பொருளியல் எதை உள்ளடக்கியது?
அ) ஒட்டு மொத்தப் பொருளாதாரம் ஆ) பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள்
இ) தனிநபர் பொருளாதார நடவடிக்கைகள் ஈ) ஒட்டுமொத்தப் பொருளாதாரத் தொடர்பு

2. பொதுவாக எந்தக் கோட்பாடு நுண்ணியல் பொருளாதாரத்தை உள்ளடக்கியது?
அ) விலைக் கோட்பாடு ஆ) வருமானக் கோட்பாடு
இ) வேலைவாய்ப்புக் கோட்பாடு ஈ) வணிகக் கோட்பாடு

3. கீழ்க்காணும் வாய்ப்பாட்டின் மூலம் இறுதிநிலைப் பயன்பாட்டை அளவிடலாம்
அ) $TU_n$ - TUn-1 ஆ) $TU_n - TUn_{+1}$ இ) $TU_n + TUn_{+1}$ ஈ) $TU_n + TU_{n+1}$

4. சாதாரணத் தரவரிசைப் பயன்பாட்டை எவ்வாறு அளவிடலாம்?
அ) தரப்படுத்துதல் ஆ) எண்ணிக்கைபடுத்துதல் இ) வார்த்தைப்படுத்துதல் ஈ) எதுவுமில்லை

5. சம உற்பத்திக்கோட்டின் வேறு பெயர்
அ) நெகிழ்ச்சியற்ற அளிப்புக்கோடு ஆ) நெகிழ்ச்சியற்ற தேவைக்கோடு
இ) சம -- இறுதிநிலைப் பயன்பாடு ஈ) சம உற்பத்தி வளைகோடு

6. நவீன பொருளியல் வல்லுநர்களின் விதி
அ) வளர்ந்துசெல் விகித அளவு ஆ) குறைந்துசெல் விகித அளவு
இ) மாறா விகித அளவு ஈ) மாறும் விகித அளவு

7. தனக்குச் சொந்தமான வளங்களை நிறுவனத்திற்குச் செய்யும் செலவு
அ) உண்மைச் செலவு ஆ) வெளியுறுச் செலவு இ) பணச் செலவு ஈ) உள்ளார்ந்த செலவு

8. இறுதிநிலை வருவாய் என்பது ஏற்கனவே உள்ள ...................... உடன் கூடுதலாகப் பெறுவது.
அ) மொத்த விற்பனை ஆ) மொத்த வருவாய் இ) மொத்த உற்பத்தி ஈ) மொத்தச் செலவு.

9. நிறைவுப்போட்டி அனுமானிப்பது
அ) ஆடம்பரப் பண்டம் ஆ) உற்பத்தியாளர் பண்டம்
இ) வேறுபடுத்தப்பட்ட பண்டம் ஈ) ஒத்த தன்மை பண்டம்

10. விலைபேதம் காட்டுதலின் விளைவு
அ) குறைவான உற்பத்தி ஆ) அதிக இலாபம் இ) பல்வேறு நிலை ஈ) அ மற்றும் இ

11. எதிர்பாராத செலவுகள் என்ற கருத்தை கீன்ஸ் கீழ்க்காணுமாறு குறிப்பிடுகிறார்.
அ) பரிமாற்ற நோக்கம் ஆ) முன்னெச்சரிக்கை நோக்கம் இ) ஊக நோக்கம் ஈ) தனிப்பட்ட நோக்கம்

12. துய்ப்புத் தவிர்ப்பு வட்டிக் கோட்பாட்டை எடுத்துரைத்தவர்
அ) ஆல்பிரட் மார்ஷல் ஆ) N.W.சீனியர் இ) போம் போவர்க் ஈ) நட் விக்சல்

13. தேசிய வளர்ச்சிக் கழகத்தை அறிமுகப்படுத்தியவர் யார்?
அ) டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் ஆ) ஜவஹர்லால் நேரு
இ) டாக்டர் இராதாகிருஷ்ணன் ஈ) V.K.R.V. ராவ்

14. இந்திய அரசாங்கம் தனது முதல் தொழிற்கொள்கையை வெளியிட்ட ஆண்டு
அ) 1956 ஆ) 1991 இ) 1948 ஈ) 2000

15. வாழ்க்கைத் தரக் குறியீட்டெண்ணை உருவாக்கியவர்
அ) திட்டக்குழு ஆ) நேரு இ) D.மோரிஸ் ஈ) பிஸ்வாஜித்

16. கீழ்க்காண்பவற்றுள் எது தனியார்மயமாதலைக் குறிக்கும்?
அ) முதலீட்டைத் திரும்பப் பெறுதல் ஆ) நாட்டுடைமை நீக்கல்
இ) தொடர் நிறுவனமாக்கல் ஈ) இவை அனைத்தும்

17. GST - இல் அதிக அளவு வரிவிதிப்பு _____ ஆகும். (ஜீலை 1, 2017 நாளின்படி )
அ) 18% ஆ) 24% இ) 28% ஈ) 32%



www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with Cam

www.freetnbooks.com

18. இரண்டு முற்றிலும் வேறுபட்ட தன்மைகளைத் தொடர்புபடுத்திக் குறிப்பது
அ) நுட்பம் ஆ) சார்ந்திருப்பு இ) இரட்டைத்தன்மை ஈ) சமமின்மை
19. "இந்திய விவசாயி கடனாளியாகப் பிறந்து, கடனாளியாக வாழ்ந்து, கடனாளியாக இறந்து, கடனையே சந்ததிக்கு விட்டுச் செல்கிறான்" இச்சொற்றொடரைக் கூறியவர் யார்?
அ) ஆடம் ஸ்மித் ஆ) காந்தி இ) அமர்த்தியா சென் ஈ) சர் மால்கம் டார்லிங்
20. பின்னலாடை உற்பத்தி அதிகம் உள்ள இடம்
அ) கோயம்புத்தூர் ஆ) திருப்பூர் இ) ஈரோடு ஈ) கரூர்

**II. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 30 - கட்டாயம்) 7 x 2 = 14**

21. பகுத்தாய்வு முறையின் பொருள் கூறுக.
22. நுகர்வோர் எச்சம் காணும் முறையை எழுதுக.
23. உற்பத்திச்சார்பினைக் குறிப்பிடுக.
24. மாறாச்செலவு என்றால் என்ன?
25. விற்பனைச் செலவு என்றால் என்ன?
26. பகிர்வின் வகைகள் யாவை?
27. "தொழில்நுட்பத் தெரிவு" பற்றி சென் கூறுவது என்ன?
28. சிறப்புப் பொருளாதார மண்டலம் என்பதன் பொருள் என்ன?
29. மறைமுக வேலையின்மை என்றால் என்ன?
30. பாரம்பரியச் சுற்றுலா என்பது என்ன?

**III. எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளி. (வினா எண் 40 - கட்டாயம்) 7 x 3 = 21**

31. நுண்ணியல் மற்றும் பேரியல் பொருளியலுக்கு இடையேயான வேறுபாடுகள் யாவை?
32. மனித விருப்பங்களின் இயல்பைக் கூறுக.
33. தொழில் முனைவோரின் பணிகள் யாவை?
34. வாய்ப்புச்செலவை எடுத்துக்காட்டுகளுடன் வரையறு.
35. கூலியின் வகைகளைப் பட்டியலிடுக.
36. பொருளாதார முன்னேற்றம் -- வரையறு.
37. காலனி ஆதிக்கத்தின்போது இந்தியாவில் நடைமுறையில் இருந்த பல்வேறு நில உடைமை முறைகள் பற்றித் தெளிவுபடுத்துக.
38. வேளாண் உற்பத்தி அங்காடிக் குழுவின் பணிகளைக் கூறு.
39. MUDRA வங்கியின் நோக்கங்களைப் பட்டியலிடுக.
40. தமிழ்நாட்டின் மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியை (GSDP) விளக்குக.

**IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 x 5 = 35**

41. அ) பொருளியலில் பகுத்தாய்வு மற்றும் தொகுத்தாய்வு முறைகளின் படிகளை விளக்குக. **(அல்லது)**
ஆ) வணிக வங்கிகள் நாட்டுடைமையாக்கப்பட்டதன் நோக்கங்களை விவரி.
42. அ) தேவை நெகிழ்ச்சியை அளவிடும் முறைகள் யாவை? **(அல்லது)**
42. ஆ) 2015 -- 2020 ஆம் ஆண்டிற்கான ஏற்றுமதி - இறக்குமதிக் கொள்கையின் சிறப்பியல்புகளை விளக்குக.
43. அ) மாறும் விகித விளைவு விதியை வரைபடத்துடன் விளக்குக. **(அல்லது)**
ஆ) ஊரகப் பொருளாதாரச் சிக்கல்களை ஆராய்க.
44. அ) மொத்தச் செலவு $10 + Q_3$, $Q = 5$ எனில் AC, AVC, TFC, AFC ஆகியவற்றைக் காண்க. **(அல்லது)**
ஆ) தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு வகையான ஆற்றல் வளங்களை விவரி.
45. அ) சில்லோர் முற்றுரிமையின் பண்புகளை விளக்குக. **(அல்லது)**
ஆ) இந்திய ஐந்தாண்டுத் திட்டங்களின் செயல்பாடுகளை விவரி.
46. அ) ரிக்கார்டோவின் வாரக்கோட்பாட்டை எடுத்துக்காட்டுடன் விவரி. **(அல்லது)**
ஆ) சிறப்புப் பொருளாதார மண்டலங்களின் நோக்கங்களையும் பண்புகளையும் விளக்குக.
47. அ) இந்தியக் கனிம வளங்களின் முக்கியத்துவத்தை விவரி. **(அல்லது)**
ஆ) அகச்சிக்கனங்கள், புறச்சிக்கனங்களை விவரி.



www.freetnbooks.com | FREETNBOOKS Scanned with Cam